## தலா ரூ.3 ஆயிரம் ரொக்கப் பரிசுடன் பொங்கல் தொகுப்பு!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலந்தூரில் இன்று தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, ஜன. 8 -**

**பொங்கல் பரிசுத் தொகுப்பு வினியோகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆலந்தூரில் இன்று (வியாழக்கிழமை) தொடங்கி வைக்கிறார். அனைத்து ரேஷன் கடைகளிலும் அன்றே வழங்கப்படும்.**

தமிழர் பண்டிகையாம் பொங்கல் திருநாளை சிறப்பாக கொண்டாட தமிழக அரசு சார்பில் ஆண்டு தோறும் பொங்கல் பரிசுதொகுப்பு பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு பொங்கல் ரொக்கப்பரிசு வழங்காத நிலையில், இந்த ஆண்டு பொங்கல் பரிசாக ரூ.3 ஆயிரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை கொண்டாட தமிழகத்தின் 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 730 அரிசி ரேஷன் அட்டைதாரர்களுக்கும், இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும், இந்த ஆண்டு பொங்கல் பரிசுத் தொகுப்பு பொருட்களுடன் தலா ரூ.3 ஆயிரம் ரொக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

பொங்கல் பரிசு தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு வழங்கப்படுகிறது. இதற்காக, தமிழக அரசு சார்பில் ரூ.248 கோடியே 66 லட்சத்து 17 ஆயிரத்து 959 நிதி ஒதுக்கி அரசு அரசாணை வெளியிட்டது.

இந்த நிலையில் அரிசி ரேஷன் அட்டைதாரர்களுக்கு தலா ரூ.3 ஆயிரம் ரொக்கப் பரிசு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொங்கல் பரிசுத் தொகுப்பும், ரொக்கப் பரிசும் சேர்த்து மொத்தம் ரூ.6 ஆயிரத்து 936 கோடியே 17 லட்சத்து 47 ஆயிரத்து 959 செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இதற்கான டோக்கன் வினியோகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் வழங்கப்பட்டு வரும் நிலையில், பொங்கல் பரிசுத் தொகுப்பு விநியோகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆலந்தூர் நசரத்புரத்தில் உள்ள ரேஷன் கடையில் இன்று (வியாழக்கிழமை) தொடங்கி வைக்கிறார்.

**அனைத்து ரேஷன் கடைகளிலும்**

எனவே, டோக்கன் வழங்கும் பணி 7ந் தேதிக்குள் பெரும்பாலும் முடிந்தது. மேலும், பொங்கல் பரிசுத் தொகுப்பு வினியோகம் நடைபெற உள்ள நிலையில் வரும் 9, 10, 11ஆம் தேதிகளில் ரேஷன் கடைகள் முழுமையாக செயல்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பொங்கல் பரிசுத் தொகுப்பு திட்டத்தை தொடங்கி வைத்த உடனே அனைத்து ரேஷன் கடைகளிலும் பொது மக்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தின் அடிப்படையில் பரிசுத் தொகுப்பைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டை நாம் ஆள வேண்டுமா? டெல்லி ஆள வேண்டுமா? முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை! ... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

கிடைக்கப் போகிறது என்று அதில் சொல்லியிருந்தார்கள்.

இப்படி நம்முடைய விடியல் ஆட்சியில், ஏதாவது ஒரு திட்டத்தில் எப்படியாவது எல்லோருக்கும் பயன் கிடைத்துவிடுகிறது! மக்கள் நலனுக்காக நாம் செயல்படுத்தும் திட்டங்களை குறை சொல்ல முடியாதவர்கள், இல்லாத பிரச்சினைகளை எல்லாம் உருவாக்கி குளிர் காயலாமா? என்று நினைக்கிறார்கள்!

அண்மையில், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தார். செய்திகளில் பார்த்திருப்பீர்கள். அவர் பேசியதெல்லாம் பார்த்தபோது, அவர் “அமித் ஷா”வா? இல்லை, “அவதூறு ஷா”வா? என்று சந்தேகம் வருகிறது! அந்தளவிற்கு உண்மைக்குப் புறம்பாக பேசிவிட்டு சென்றிருக்கிறார்.

தமிழ்நாட்டில் இந்து சமய நம்பிக்கைகள், வழிபாட்டு உரிமைகளுக்கு முடிவுகட்டும் வகையில், நம்முடைய தமிழ்நாடு செயல்படுவதாக அமித்ஷா அவர்கள் பேசிவிட்டு சென்றிருக்கிறார். இதற்காக என்னுடைய கடுமையான கண்டனத்தை உங்கள் மூலமாக, இந்த விழாவின் மூலமாக, இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவருக்கு தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை போல!

**பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில்**
**இப்படியொரு சாதனை நடைபெற்றிருக்கிறதா?**

நம்முடைய அரசு பொறுப்பேற்றதிலிருந்து இப்போது வரை சுமார் 4 ஆயிரம் திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு அதாவது, அவருக்கு புரியும் மொழியில் சொல்ல வேண்டும் என்றால், கும்பாபிஷேகம் நடத்தியிருக்கிறோம்! இப்படியொரு சாதனையை நீங்கள் ஆளுகின்ற பா.ஜ.க. மாநிலங்களில் செய்திருக்கிறீர்களா? கண்டிப்பாக இருக்காது.

அதுமட்டுமல்ல, 997 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 7 ஆயிரத்து 701 கோடி ரூபாய் மதிப்பிலான 7 ஆயிரத்து 655 ஏக்கர் நிலங்களை மீட்டிருக்கிறோம். உண்மையான பக்தர்கள் நம்முடைய அரசைப் பாராட்டுகிறார்கள்.

**பக்தர்கள் விரும்பும்**
**திராவிட மாடல் ஆட்சி!**

தலைமைச் செயலகத்தில் வாரத்தில் எப்படியாவது இரண்டு நாட்கள் இந்து சமய அறநிலையத் துறை சார்ந்த பணிகளை நான் தொடங்கி வைத்து அந்த விழாவில் பங்கேற்கிறேன். நம்முடைய ஆட்சியில், இந்து சமயம் சார்ந்து என்னென்ன செய்திருக்கிறோம் என்று ஒரு நாள் முழுவதும் பேசுகின்ற அளவிற்கு சாதனைகள் பெரிய பட்டியலே இருக்கிறது. அதனால் தான் பக்தர்கள் விரும்பும் ஆட்சியாகதான் திராவிட மாடல் ஆட்சி இருக்கிறது, ஆன்மீகப் பெரியவர்கள் விரும்பும் ஆட்சியாக இருக்கிறது. அனைத்து சமயத்தவர்களின் நம்பிக்கைக்கும் மதிப்பளித்து, அவர்களின் மத உரிமைகளை காப்பாற்றும் ஆட்சியை நடத்திக் கொண்டு வருகிறோம்.

இப்படிப்பட்ட நம்முடைய தமிழ்நாட்டில் இந்துக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதாக துளியும் உண்மையில்லாத குற்றச்சாட்டை உள்துறை அமைச்சர் சொல்வது அவருடைய பதவிக்கு கண்ணியமல்ல. உண்மையைச் சொல்லவேண்டும் என்றால், கலவரம் செய்யவும், பிளவு ஏற்படுத்த வேண்டும் என்று நினைப்பவர்களின் எண்ணம் தான் தமிழ்நாட்டில் ஈடேறவில்லை! அது இனியும் நடக்காது! நடக்கவும் விடமாட்டோம்! இந்த ஸ்டாலின் இருக்கின்றவரை அது நடக்கவே நடக்காது! வெளிப்படையாக சொல்லவேண்டும் என்றால், ஒரு சிலர், இங்கு இப்படி பேசி, வடமாநிலங்களில் வெறுப்பு பிரசாரம் செய்யலாமா என்பது தான் அவர்களின் எண்ணம்!

தமிழ்நாடு வந்த உள்துறை அமைச்சர் அவதூறு மட்டும் பரப்பிவிட்டு செல்லவில்லை. ஒரு நல்ல காரியத்தையும் செய்துவிட்டு சென்றிருக்கிறார். நாம் கேட்க வேண்டிய கேள்வியை அவரே கேட்டுவிட்டார். நம்முடைய வேலையை அவர் இன்னும் ஈசியாக்கிவிட்டார்! அதற்காக நான் அவருக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன்.

**தமிழர்களின் சுயமரியாதைக்கு**
**விடப்பட்ட சவால்!**

“தமிழ்நாட்டில் மோடி ஆட்சி அமைய வேண்டுமா... வேண்டாமா?” என்று மக்களைப் பார்த்து அமித் ஷா அவர்கள் கேட்டிருக்கிறார். ஐயா, இதையேதான் நாங்களும் சொல்கிறோம்! 2026 தேர்தல் என்பது, “தமிழ்நாட்டை நாங்கள் ஆளவேண்டுமா? இல்லை, எங்கேயோ டெல்லியில் இருந்து, நமக்கு சம்பந்தம் இல்லாதவர்கள் ஆள வேண்டுமா? என்று முடிவு செய்வதற்கான தேர்தல்! இது தமிழர்களின் சுயமரியாதைக்கு விடப்பட்டிருக்கக் கூடிய சவால்!”

**தமிழ்நாட்டு மக்கள்**
**பா.ஜ.க.வை நம்பத் தயாராக இல்லை!**

“அ.தி.மு.க. கூட்டணிக்கு வாக்களித்தால், பா.ஜ.க.தான் தமிழ்நாட்டை ஆளும்” என்று நாங்கள் சொல்லி புரிய வைக்க வேண்டிய அவசியமில்லை, அமித் ஷா அவர்கள் நேரடியாகவே ஒப்புதல் வாக்குமூலமாக தந்திருக்கிறார்!

‘நீட்‘டை விடாப்பிடியாக திணிக்கும் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை விடுவிக்காமல், தேசிய கல்விக் கொள்கையை திணிக்கும், தொகுதி மறுவரையறை என்கிற பெயரில் தமிழ்நாட்டின் ஜனநாயக வலிமையை குறைக்கும், வட மாநிலங்களில் தமிழர்களை கொச்சைப்படுத்தும், BJP ஆட்சி அமையதான் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி பாடுபடுகிறார்!

அம்மையார் ஜெயலலிதா அவர்களின் மறைவிற்குப் பிறகு, தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் ‘ப்ராக்சி’ ஆட்சி நடந்தது! கடந்த 5 ஆண்டுகளாகதான் அதில் இருந்து தமிழ்நாடு மீண்டு தலைநிமிர ஆரம்பித்திருக்கிறோம். இப்போது நேரடியாகவே பா.ஜ.க. ஆட்சி என்று சொல்லிகொண்டு வருகிறார்கள்!

11 ஆண்டுகளாக ஒன்றியத்தில் நடைபெறுகின்ற N.D.A. ஆட்சியில் தமிழ்நாட்டிற்காக ஒரு துரும்பை கூட கிள்ளிப் போடாத உங்களை தமிழ்நாட்டு மக்கள் நம்பத் தயாராக இல்லை!

2019, 2021, 2024என்று கடந்த மூன்று பொதுத் தேர்தல்களிலும் படுதோல்வியை பரிசாக தந்ததும் உங்களுக்கு அது புரியவில்லையா? தமிழ்நாட்டிற்கு ஓரவஞ்சனை செய்வதை நீங்கள் மாற்றிக்கொள்ளாதபோது, தமிழர்கள் மட்டும் தங்களுடைய முடிவை மட்டும் எப்படி மாற்றிக் கொள்வார்கள்?

**மறுபடியும் நாங்கள் தான் வருவோம்!**
**நல்லாட்சியைத் தொடர்வோம்!**

மக்கள் எப்போதும் நம்முடைய அரசு பக்கம் தான் இருக்கிறார்கள்! மறுபடியும் நாங்கள்தான் வருவோம்! நல்லாட்சியைத் தொடர்வோம்! எதிலும் நம்பர் ஒன், அனைத்துத் துறையிலும் ஏற்றம் என்று இதுவரை காணாத வளர்ச்சியை நோக்கி தமிழ்நாட்டை கொண்டு செல்வோம். திராவிட மாடல் 2.0வில் இன்னும் பெரிய சாதனைகளைப் படைப்போம்! என்று கூறி உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## சாதனைக்கு சொந்தக்காரர் அமைச்சர் அர.சக்கரபாணி!



**உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணியும் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். அதனால்தான் தொடர் வெற்றிக்கு சொந்தக்காரராக இருக்கிறார். அவரின் துறையில், நம்முடைய திராவிட மாடல் அரசு செய்திருக்கக்கூடிய ஒரே ஒரு சாதனையைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன்.**

**அ.தி.மு.க. ஆட்சியில், 10 ஆண்டு காலம் கொள்முதல் செய்யப்பட்ட நெல் அளவு 1 கோடியே 79 இலட்சத்து 81 ஆயிரத்து 152 மெட்ரிக் டன்! ஆனால், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் வெறும் நான்கரை ஆண்டுகளில், 1 கோடியே 99 இலட்சத்து 75 ஆயிரத்து 710 மெட்ரிக் டன் கொள்முதல் நாங்கள் செய்திருக்கிறோம். நன்றாக கவனியுங்கள் அ.தி.மு.க.வின் பத்தாண்டுகளை விட நம்முடைய ஐந்தே வருடத்தில், 19 இலட்சத்து 94 ஆயிரத்து 558 மெட்ரிக் டன் அதிகமாக நாம் கொள்முதல் செய்திருக்கிறோம். இது சாதாரணமானது அல்ல; மிகப் பெரிய சாதனை. இந்த சாதனைக்கு சொந்தக்காரர்தான் நம்முடைய சக்கரபாணி அவர்கள்.**

### ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமையில்

## பூவிருந்தவல்லி பேரறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளியில் நூற்றாண்டு விழா!

### அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி- ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை ஆற்றினர்!

*திருவள்ளூர் ஜன. 08-*

*திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி உள்ள அறிஞர் அண்ணா அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பூந்தமல்லி, மாங்காடு, சென்னீர்குப்பம், திருவேற்காடு, காட்டுப்பாக்கம், அய்யப்பன்தாங்கல் உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளைச் சார்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் படித்து வருகின்றனர். 1924 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த அரசு பள்ளியின் நூற்றாண்டு விழா நேற்று மாலை நடைபெற்றது.*

*இதில் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவரான பூந்தமல்லி கிருஷ்ணசாமி எம்எல்ஏ தலைமை தாங்கினார். திருவள்ளூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சொ. கற்பகம் வரவேற்று பேசினார். நகர திமுக செயலாளர் ஜி.ஆர். திருமலை, நகர் மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், துணைத் தலைவர் ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*இந்த நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.*

*முன்னதாக பள்ளி வளாகத்தில் அமைக்கப் பட்டிருந்த அறிவியல் கண்காட்சியை அமைச்சர்கள் பார்வையிட்டனர். இதனைத் தொடர்ந்து திருவள்ளுவர், பேரறிஞர் அண்ணா சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.*

*பின்னர் இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் அன்பில் மகேஷ் பேசியதாவது: இந்த பள்ளி வளாகத்திற்கு முன்னாள் முதலமைச்சர்கள் பக்தவச்சலம், அண்ணாதுரை, எம்ஜிஆர், கலைஞர் வந்து சென்றனர் என்பதன் மூலம் இந்தப் பள்ளியின் பெருமையை உணர முடிகிறது. தற்போது தமிழ்நாட்டில் 2211 பள்ளிகள் நூற்றாண்டை கொண்டாடி கொண்டு இருக்கின்றன. இங்குள்ள பெண்கள் பள்ளிக்கு கலைஞர் பெயரை வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து*

*தமிழக முதல்வர் கவனத்திற்கு எடுத்துச் சென்று முதல்வரின் கலைஞரின் பெயரை வைக்க பாடுபடுவேன். மாணவர்களின் பெற்றோருக்கு நான் வைக்கும் வேண்டுகோள், மற்ற பிள்ளையுடன் நமது பிள்ளைகளை ஒப்பிட்டு பார்க்காதீர்கள். இங்கு படிக்கும் மாணவர்கள் வரும் காலங்களில் நீங்கள் இந்தப் பள்ளிக்கு சிறப்பு விருந்தினராக வர வேண்டும்.*

*நீங்கள் படித்து கொண்டே இருக்க வேண்டும் என்பது தான் எங்களது ஆசை. பள்ளிக்கு போவது அவசியம். டெக்னாலஜியை நிறைய தெரிந்து கொள்ளுங்கள். அதனால் தான் தமிழ்நாட்டு முதலமைச்சர் டெக்னாலஜி சார்ந்து நிறைய நம்முடைய மாநிலத்திற்கு நிறைய திட்டங்களை தொடர்ந்து கொண்டு வந்து கொண்டிருக்கின்றார்.*

*உங்களுக்கு உறுதுணையாக நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களும், நம்முடைய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் என்றைக்குமே இருப்பார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்று அவர் கூறினார்.*

*இந்த நிகழ்ச்சியில் உயர்நீதிமன்றநீதியரசர்(ஓய்வு)ஞானப்பிரகாசம், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே. ரமேஷ் தொகுதி பார்வையாளர் பி டி சி செல்வராஜ் மாநில சிறுபான்மையினர் நலக்குழு அணி இணைச் செயலாளர் சி. ஜெரால்டு மாவட்ட துணைச் செயலாளர் காயத்ரி ஸ்ரீதரன் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ், பெற்றோர்ஆசிரியர்கழகநிர்வாகிகள்டேவிஸ் இளங்கோவன், சரவணகுமார் அன்பழகன், ஜெயசீலன், டி.ஆர். ஆர். செங்குட்டுவன்,நிர்வாகிகள் வழக்கறிஞர் வினோத், குமரேசன், விமல் ஆனந்த், நகரக் கழக நிர்வாகிகள் தாஜுதீன், அப்பர் ஸ்டாலின், டில்லி ராணி மலர் மன்னன், அசோக் குமார், ஜெ.சுதாகர் , புண்ணியங்கோட்டி சௌந்தரராஜன், ஏ. ராஷிக்,மாமன்ற உறுப்பினர் தீபா யுவராஜ், மற்றும் திமுக நிர்வாகிகள், முன்னாள் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி முடிவில் தலைமை ஆசிரியர் கிறிஸ்டோபர் ஜெயக்குமார் நன்றி கூறினார்*



சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு தலைமையில் நடைப்பெற்றது. கூட்டத்தில் திராவிட பொங்கல் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்.இதில் மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து வர்த்தக அணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

